සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**
Sabaragamuwa Provincial Department of Education

| | |
|---|---|
| **පළමු වාර පරීක්ෂණය 2018** | **11 ශ්‍රේණිය** |
| முதலாம் தவணைப் பரீட்சை **2018** | தரம்**11** |
| **First Term Test 2018** | **Grade 11** |

| | |
|---|---|
| දෙමළ සාහිත්‍යය | පැය තුනයි |
| **தமிழ் இலக்கிய நயம்** | **மூன்று மணித்தியாலம்** |
| **Tamil Literature** | ***Three hours*** |

பகுதி 1இல்1,2 ஆகிய வினாக்களுக்கும் பகுதி II இல் 3 ஆம் வினாவிற்கும் பகுதி III இல் 4,5,6,7 ஆகிய வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் 05 வினாக்களுக்கு விடை தருக.

பகுதி – I

சுருக்கமான விடை தருக.

1. ‘‘இனித்த புவி இயற்கையெழில் எல்லாம் கண்டேன்’’

    அ. இக்கூற்றுக்குரியவர் யார்?
    ஆ. இவரின் இயற்பெயர் யாது?

2. ‘‘ஆறலை கள்வர் படை விட அருளின் மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை’’

    அ. இக் கூற்றைக் கூறியவர் யார்?
    ஆ. இக் கூற்று இடம் பெறும் நூல் எது?

3. ‘‘எனக்குத் தாங்க ஆச்சி நான் விசாரிச்சுப் பாத்திட்டு செல்லியன்!’’

    அ. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
    ஆ. எச்சமூகத்திற்குரிய கூற்று?

4. வெய்தின் நீ வருதல் நோக்கி வெருவி நின் சேனை வீரர் செய்தி தான் உணர்கிலாது திரு உளம் தெரித்து என்றார்’’

    அ. யாரால்? யாருக்கு?
    ஆ. எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?

5. ‘‘அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர் அடிக்கு நெருஞ்சிப் பழம்’’

    அ. இத்தொடரில் பயின்றுள்ள அணியாது?
    ஆ. இத் தொடரின் பொருளை உமது மொழி நடையில் தருக.

(4*5=20)

2. கீழ் காணும் பாடற்பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைத்தருக.

காலையிலே பனி காயுமுன்னே குளிர்
காற்றைக் கிழித்துமே ஓடுகின்றோம் -தொழிற்
சாலையிலே சங்கு ஊது முன்னே பசுந்
தங்கத் தளிரினை கிள்ளிடுவோம்.

வெண்டை விரல்கள் விறைத்திடினும் எங்கள்
மேனி குளிரில் நடுங்கிடினும் -இரு
கெண்டை விழிகள் பளபளக்கும்
கூடை அசைந்து பக்கத்திலும் வந்து

கூட்டும் ''கிறுக் கிறுக்'' ஓசையிலே நெஞ்ச
மேடையிலே சதிராடுமெண்ணங்களின்
வேதனை துன்ப ஒலி கேட்கும்
பக்க நிரைச் செடி சிக்கிடும் போதிலும்

பக்குவ மாகவி லக்கிச் செல்வோம் - எங்களை
சிக்கவைத் திருக்கும் அடிமைத் தளையினை
தூக்கி யெறியத் துணிவு கொள்வோம்.

1. மலையகத் தொழிலாளப் பெண்கள் எப்போது எவ்விதம் வேலைக்குச் செல்வதாக கூறப்பட்டுள்ளது?
2. இப் பெண்களுக்கு வேலையின் மீதுள்ள ஆசை எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?
3. அடிமை தனத்திலிருந்து விடுபடுவதற்குறிய தன்மையை விளக்கும் வரியினை குறிப்பிட்டு விளக்குக.
4. ''மேடையிலே சதிராடுமெண்ணங்களின் வேதனை துன்ப ஒலி கேட்கும்''என்ற வரிகளின் மூலம் விளக்கப்படுவது யாது?
5. இப்பகுதியில் வந்துள்ள உவமையணிகளை குறிப்பிட்டு விளக்குக.

(5*5=25)

## பகுதி – II

3)கீழ் காணும் உரைப்பகுதியினை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்குளுக்கு விடைத்தருக.

எலிகள் அவனுக்கு எப்பொழுமே பிடிக்காது இவனைப் போலவே எலிகளைப் பிடிக்காத ஒருவன் உயிரியல் பயிற்சி வகுப்புக்கு எலிகளை வெட்டி ஆராயும் முறையை கொணர்ந்திருக்க வேண்டும். எலிகள் மாத்திரம் அல்ல பல்லி, கரப்பான்பூச்சி, பூரான், நத்தை எல்லாவற்றுக்கும் மேலாக மிக அவதியுடன் கழிப்றைக்குள் நுழையும் போது வழிமறித்துக்கொண்டு பேந்தப் பேந்த விழித்தப்படி காத்துக்கொண்டிருக்கமே அந்தத் தேரை இவற்றையெல்லாம் அவனுக்கு கண்ணில் காட்டக்கூடாது.

எலி பிள்ளையார் வாகனம் என அம்மா அடிக்கடி சொல்லுவா அதனால் எலியைத் துன்புறுத்துவது தெய்வ நிந்தனையாம் .ஆனால் பள்ளி நாட்களில் எலி வேண்டுமென உயிரியல் வாத்தியார் சொல்லியதைத் தெரிவித்த போது அம்மா மௌனம் சாதித்தாள் .அன்று அம்மா என்னமாய் கஷ்டப்பட்டு எலியைப் பிடித்துத் தந்தார்.

1. இவ்வுரைப்பகுதி இடம் பெறும் கதையின் தலைப்பு யாது?
2. அவனுக்கு பிடிக்காத விடயங்கள் எவை என குறிப்பிடப்பட்டுள்ளது?
3. கதையில் வந்துள்ள நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்தும் வரிகள் இரண்டைக் குறிப்பிடுக.
4. ‘‘எலி பிள்ளையார் வாகனம்’’என்ற தொடரின் மூலம் வெளிப்படுத்துவது யாது?
5. எலிகள் அவனுக்கு கொடுத்த தொல்லைகள் 5 தருக.

## பகுதி - III

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடைத்தருக.

4) அ. வாய் மொழிப்பாடல்கள் என்றால் என்ன? ( 3 புள்ளிகள் )

ஆ. வாய் மொழிப்பாடல்களின் வகைகள் எவை? (5 புள்ளிகள் )

இ. மருத்துவச்சி வாழ்த்துப்பாடலில் வெளிப்படும் கிராமிய மண்வாசனையை குறிப்பிட்டு விளக்குக ( 7புள்ளிகள் )

5. கிட்கிந்தை படலத்தை ஆதாரமாக கொண்டு விடைதருக.

அ. இலக்குவணனின் வருகையை கண்ட கிட்கிந்தை மலை வாழ் குரங்குகளின் நிலையும் மலையின் நிலையும்

ஆ. இராமனின் கோபம்.

இ. இலக்குவணனின் பெருமை ஆகியவற்றை விளக்குக.

( 15 புள்ளிகள் )

6) விவேக சிந்தாமணியில்

அ. தலைவி நீரில் கண்ட காட்சி.

ஆ. கண்களின் அழகைப்புலப்படுத்த கவிஞர் கையாண்ட சிறப்பு,நயம் ஆகியவற்றை விளக்குக.

( 15 புள்ளிகள் )

7) ‘‘உரிமையும் கடமையும்’’ என்ற கட்டுரையில் கீழ்வருவன பற்றி ஆசிரியர் கூறும் கருத்தினை விளக்குக.

அ. அன்பின் உயர்வு.

ஆ. உரிமை, கடமை,அன்பு ஆகியவற்றுகிடையிலான தொடர்பு. ( 15 புள்ளிகள் )